# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 12

சுட்டெண்:.......................................................... நேரம்: 180 மணித்துளிகள்

**1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான விடையைத் தேர்ந்து எழுதுக.**

1. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து அல்லாதது

அ) ச ஆ) ப இ) அ ஈ) க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மிலேச்சர் என அழைக்கப்பட்டவர்

அ) ஆரியர் ஆ) சமணர்
இ) பல்லவர் ஈ) பாண்டியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கழகக்கால இலக்கியங்களில் புறம் எனக் குறிப்பிடுவது

அ) துன்பம் ஆ) காதல் இ) உண்மை ஈ) வீரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. முதல் எழுத்துகள்

அ) 24 ஆ) 30 இ) 18 ஈ) 217

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. மேசையில் நூல் இருக்கிறது. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு

அ) ஏழாவது ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) நான்காவது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. புறநானூறு எக்கழக இலக்கியம்?

அ) இடைக்கழகம் ஆ) கடைக்கழகம்

இ) முதற்கழகம் ஈ) எக்கழகத்திற்கும் உரியதல்ல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. களிறு என்ற சொல் குறிப்பது.

அ) ஆண்குதிரை ஆ) ஆண்சிங்கம்

இ) ஆண்புலி ஈ) ஆண்யானை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும். இடும்பை என்பது

அ) துன்பம் ஆ) இன்பம் இ) மகிழ்ச்சி ஈ) நன்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் இதில் வந்துள்ள ஐந்து

அ) ஐம்புலன்கள் ஆ) ஐம்பூதங்கள்

இ) ஐந்து குணங்கள் ஈ) ஐந்திலக்கணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கேரளம் என்று இன்று அழைக்கப்படும் நாடு

அ) சோழநாடு ஆ) பாண்டிநாடு

இ) சேரநாடு ஈ) தமிழ்நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பூசை என்பதைப் பிரித்தால் வருவது

அ) பூ + செய் ஆ) பூ + சை

இ) பூ + ஐ ஈ) பூ + சைய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பின்வருவனவற்றுள் குறிப்புவினை

அ) பொன்னன் ஆ) வந்தான்

இ) வந்த ஈ) செய்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ''பதி எழு அறியாப் பழங்குடி'' எனக்கூறுவது

அ) மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம்

இ) குண்டலகேசி ஈ) வளையாபதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அறநெறிக் காலத்தில் தமிழ் நாட்டில் வேரூன்றி இருந்த சமயம்

அ) சைவம் ஆ) கிறித்தவம்

இ) சமணம் ஈ) வைணவம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நன்னூலை எழுதியவர்

அ) பவுணந்தி ஆ) அருணகிரி

இ) சம்பந்தர் ஈ) சேக்கிழார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. கலிங்கத்துப் பரணியில் பாடப்பட்டது.

அ) சோழமன்னனின் வெற்றி ஆ) பாண்டிய மன்னனின் வெற்றி

இ) சேர மன்னனின் வெற்றி ஈ) நாயக்க மன்னனின் வெற்றி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் பெயரெச்சம்

அ) வந்து ஆ) வந்தான் இ) வந்த ஈ) வந்தேன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. புன்கண் என்ற சொல்லின் பொருள்

அ) துன்பம் ஆ) இனிமை இ) தனிமை ஈ) மகிழ்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஐம்படைத்தாலியுடன் போர் புரிந்த சிறுவன்

அ) கரிகாலன் ஆ) இராசராசசோழன்

இ) குலோத்துங்கன் ஈ) நெடுஞ்செழியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. நிறைதமிழ்ப் போராளிகளில் ஒருவர்

அ) மறைமலை அடிகள் ஆ) இளங்கோவடிகள்

இ) சின்னத்தம்பிப்புலவர் ஈ) தனிநாயகமடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நன்றிக்கு வித்தாவது

அ) தீயொழுக்கம் ஆ) நல்லொழுக்கம்

இ) கூடாவொழுக்கம் ஈ) கெட்டொழுக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குறள்:-

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
........................ அறிவிலா தார்.

அ) கல்லார் ஆ) நல்லார் இ) பொல்லார் ஈ) செல்லார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. வேற்றுமைகள்

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும். என்ற பழமொழி குறித்து நிற்பது.

அ) சோம்பல் ஆ) முயற்சி இ) பெருமை ஈ) முன்னேற்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. இராசஇராச சோழனின் அக்கா

அ) குந்தவை ஆ) மந்தாரை இ) ஐயை ஈ) மாதவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. முந்நீர் என அழைக்கப்படுவது

அ) ஆறு ஆ) கிணறு இ) கடல் ஈ) குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தமிழரது வழிபாட்டில் வேள்வி செய்யும் முறையைப் புகுத்தியவர்

அ) சமணர் ஆ) பௌத்தர் இ) ஆரியர் ஈ) வைணவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. வேற்றுமை உருபுகள்

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. வருவான் என்பதில் உள்ள எதிர்கால இடைநிலை

அ) ப் ஆ) ர் இ) வ் ஈ) அன்

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

30. விழுப்பம் என்ற சொல் குறித்து நிற்பது

அ) வறுமையை ஆ) இன்பத்தை இ) அறிவை ஈ) மேன்மையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கற்கள் அவன் காலைக் குத்தின. கோடை வெய்யில் கொழுத்திற்று. குடைபிடிக்க வழியில் ஒரு மரமும் தயாராக இல்லை. தலைவெடித்தாலும் வெடிக்கட்டும் என்று தன் நடையைத் தொடர்ந்தான். கடும் பயணத்தை நிறுத்தவில்லை. தாகத்தால் நா வறண்டது. பாக்கு வெட்டும் கருவிபோல் பசி குடலை வெட்டியது. இன்னும் பாதித்தொலைவு இருக்கின்றதே என்று தன் இன்னலை மறந்து நடந்தான். இதயம் வேண்டுகோள் விடுத்தது கொஞ்சம் இளைப்பாறு என்று. ஆனால் அவன் அசையவில்லை. கோட்டான் அலறல், கொடிய விலங்குகள் உறுமல், யானையின் பிளிறல், நரிகளின் ஊளை. கர்ப்பப்பையில் தோன்றிய போதே அச்சம் என்பதை அறவே வெறுத்தவன். அதனால் அச்சம் இன்றி நடந்தான். நடந்துகொண்டே இருந்தான். பாம்பு சுற்றியது காலில் பச்சைக் கொடியைப் பிடுங்குவது போல் பிடுங்கி எறிந்தான். தூற்றியது வானம், முழங்கின இடிகள், வந்தே சேர்ந்தது மழையும். ஆனால் அவன் எதற்கும் வாடவில்லை, வருந்த வில்லை. வைத்த குறிக்கோள் மாறவுமில்லை. நஞ்சாய்த் தோன்றிய துயர்கள் அனைத்தும் பஞ்சாய்ப்பறந்தன. தேடிய இலக்கு இவனைத் தேடி வந்தது. இலக்கை நோக்கிய பாதையில் இத்தனை தடைகள் இருந்தாலும் அவன் வென்று விட்டான். அப்போது அவன் நினைத்துக் கொண்டான் வாழ்க்கைப் பயணமும் இலக்கை நோக்கிய பயணமும் கரடு முரடானவை. ஆனால் துணிந்து நின்றால் அத்தனையும் தூசிகள். துணிந்தவனுக்குத் தூக்கு மேடையும் பஞ்சுமெத்தை.

1. இவன் எதை நோக்கிச் சென்றான்?

_______________________________________________

_______________________________________________

2. இலக்கு நோக்கிய பாதை எப்படியானது?

_______________________________________________

_______________________________________________

3. இவனது இலக்கு நோக்கிய பாதையில் ஏற்பட்ட துன்பங்கள் மூன்றினை எழுதுக.

______________________________________________

______________________________________________

______________________________________________

4. எங்கள் வாழ்க்கைப் பாதையில் ஏற்படும் தடைகளை அகற்ற நாம் என்ன செய்யவேண்டும்?

______________________________________________

______________________________________________

5. இப்பகுதியைப் படித்த பின்னர் உமது மனதில் எழும் எண்ணம் யாது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. பின்வரும் குறளின் பொருளைத் தருக.

   குறள்: -

   ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவர் எய்தாப் பழி

   ________________________________________

   ________________________________________

2. கல்வி பற்றி மனுநூல் கூறுவது யாது?

   ________________________________________

   ________________________________________

3. பெருஞ்சேரலாதன் எவ்வாறு உயிர் நீத்தான்?

   ________________________________________

   ________________________________________

4. ஆரியர் வரவால் தமிழர் என்ன செய்ய நேரிட்டது?

   ________________________________________

   ________________________________________

5. சேரன், சோழன் இருவரதும் சிறப்பை வெளிப்படுத்த புலவர் கையாண்ட உவமைகள் எவை?

   ________________________________________

   ________________________________________

6. எக்காலப் பகுதியில் ஆரியர் ஊடுருவல் தொடங்கியது?

   ________________________________________

   ________________________________________

7. பொறாமை உடையவரிடம் ஏன் செல்வம் சேருவதில்லை?

   ________________________________________

   ________________________________________

புள்ளிகள் 10

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து 10 வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. மாமரத்துக் குயிலே என் வீடு இன்னும் இருக்கிறதா ....

2. இம்மண்ணில் நாம் ஏன் பிறந்தோம்
   எம் மண்ணென்று எதைச் சொல்வோம்....

3. பொய்யாகிப் போகாதோ நான் கேட்ட செய்தி....

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவற்றின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

______________________________

2. 5ம், 6ம் வேற்றுமை உருபுகள் இடம் பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

______________________________

______________________________

3. இடவாகுபெயர், குணவாகுபெயர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

______________________________

4. சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

5. வந்தான் என்ற வினைச்சொல்லின் திணை, பால், காலம் என்பவற்றைத் தருக.

திணை :- ______________

பால் :- ______________

காலம் :- ______________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

சிறந்த நூல்கள் இந்த உலகத்தில் மிகவும் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன. எங்கள் அறிவுக்கண்களைத் திறக்கும் அரும் பெருஞ் செல்வங்கள் நூல்கள் ஆகும். வாசிப்பதால் மாந்தன் முழுமை அடைகின்றான் என்று கூறுவது நூறு விழுக்காடு (வீதம்) உண்மையாகும். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. "எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படும்" என்பது பொன் மொழி . ஒரு சிறந்த நூலைப் படிக்கும் போது அதில் உள்ள சிறந்த கருத்துகள் உள்வாங்கப் படுகின்றன. அதனால் அந்நூலை வாசிக்கும்போது அவனை அறியாமலே தன்னைத் திருத்திக் கொள்ள முடிகின்றது. தன் அறிவை வளர்த்துக் கொள்ள முடிகின்றது. சிறந்த மாந்தனாக இந்த உலகில் வாழ முடிகிறது. பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாட நூல்களாயினுஞ் சரி பொது நூலகத்தில் காணப்படும் பாடநூல்களாயினுஞ் சரி எல்லாமே அறிவுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

இத்தகைய நூல்களை நாம் பேணவும் மதிக்கவும் தெரிந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு சிறிய நூலகம் இருக்க வேண்டும். பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தைத் தூண்ட வேண்டும். நூல்களை வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி பிள்ளைகளுடன் கலந்துரையாட வேண்டும். தேனைத் தேடிச் செல்லும் வண்டுகள் போல நல்ல நூல்களைத் தேடிப் படித்துப் பயன்பெறுவோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ ஒழுக்கம் பற்றி வள்ளுவர் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

★ ஆரிய ஊடுருவலால் எம்மினத்திற்கு ஏற்பட்ட தாக்கங்கள்.

★ புலம் பெயர் நாட்டில் நாமும் எமது பண்பாடும்.

புள்ளிகள் 20